# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre






Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 8

# தமிழ் இலக்கியங்களில் மழையின் மகத்துவம்

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

அன்பான பெரியோர்களே, ஆசிரியர்களே, மற்றும் சக மாணவர்களே! அனைவருக்கும் வணக்கம்.
**”தமிழ் இலக்கியங்களில் மழையின் மகத்துவம்”** பற்றி இன்று பேச இருக்கின்றேன்.

மழை என்பது ”இயற்கையின் மிக அழகான பரிசு”. இதன் பயனை பண்டைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். அதனால் தமிழ் இலக்கியங்களில் மழைக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு.

**”விசும்பின் துளிவீழின் அல்லால் மாற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்ப தரிது”**
என்கிறது திருக்குறள். ’உலகில் ஒரு சிறிய புல் வாழ்வதற்குக் கூட மழை அவசியம்’ என்பதை அழகாக கூறியுள்ளார் திருவள்ளுவர்.

பழந்தமிழர்கள் ’நீர் சுழற்சி’ பற்றிய அறிவியலை நன்கு அறிந்திருந்தார்கள். இதை ”பட்டினப்பாலை” பாடல் வரிகளில் காணலாம்.
**”வான் முகந்த நீர் மலைப் பொழியவும்**
**மலைப் பொழிந்த நீர் கடற்பரப்பவும்**
**மாரி பெய்யும் பருவம் போல”**
மேலும், சிலப்பதிகாரத்தில் வரும்
**“மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்”**
எனும் பாடல் தமிழர்கள் இயற்கையை எவ்வாறு போற்றினார்கள் என்பதற்குச் சான்றாகும்.
**”தீயினில் தீயெனப் பொழியுதே மழை!”** என்று மழையின் சக்தியை புதுக் கவிதையாக வடித்தார் பாரதியார்.

இவை தவிர, அக்கால பழமொழிகள் கூட மழை வரப்போவதை முன் கூட்டியே அறிவிக்கப் பாவிக்கப் பட்டன.

**”அகல வட்டம் பகல் மழை”.**
**”கிட்டத்தில் கட்டினால் எட்டத்தில் மழை”.**
**”அந்தி மழை அழுதாலும் விடாது”.**
**”தவளை கத்தினால் மழை வரும்”**
இவ்வாறு, பண்டைத் தமிழர்கள் மழையைப் பற்றிப் பரந்த அறிவுடன் இருந்ததை இலக்கியங்களில் கண்டோம்.

இயற்கையின் கொடையாம் மழையினைப் போற்றுவோம்!
இலக்கியங்களில் அதன் உணர்வினைப் படித்திடுவோம்!



நன்றி.
வணக்கம்.

**ஆக்கம்:**
**திருமதி. சாந்தினி ஜெயதேவன்**

**பேச்சுப் போட்டி எதிர்வரும் 31.05.2025 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.**